# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – 2017 யூலை

## (AA32) முகாமைக் கணக்கீடும் நிதியும்
**MANAGEMENT ACCOUNTING AND FINANCE**

---

**மேலோட்டம்:**

இந்த வினாப்பத்திரம் மொத்தம் 100 புள்ளிகளுக்கான மூன்று பிரிவுகளைக் கொண்டது.

1. பிரிவு **A:** 20 புள்ளிகளுக்கான நான்கு கட்டாய வினாக்கள்
2. பிரிவு **B:** 30 புள்ளிகளுக்கான மூன்று கட்டாய வினாக்கள்
3. பிரிவு **C:** 50 புள்ளிகளுக்கான இரண்டு கட்டாய வினாக்கள்

**பொதுவான வியாக்கியானம்:**
இவ்வினாப்பத்திரத்திற்கு அனேகமான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லை. ஆனால் சில பரீட்சார்த்திகள் நன்கு விடையளித்திருந்தனர்.

**பிரிவுவாரியான பெறுபேறு:**

**பிரிவு A** யில் Q 3 இனைத் தவிர ஏனைய வினாக்களின் பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன.

**பிரிவு B** யில் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கவில்லை.

**பிரிவு C** யில் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன.

---

## பிரிவு A

### வினா இல. 01

இந்த வினாவில் தனிப்பட்ட நிதிபற்றிய பதிவுகளை பேணுவதன் அனுகூலங்கள் மூன்றினை (03) நிரற்படுத்துமாறும், நிதிச்சுதந்திரத்தை அடையும் இரு (02) வழிகளை குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** நன்று

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து அவர்கள் சுயகற்கைப் புத்தகத்தை படித்திருப்பதாக தெரியவில்லை. இந்த வினாவுக்கான விடை பொதுஅறிவைக் கொண்டும் எழுதப்படக்கூடியது. சிலர் பொருத்தமான விடையை எழுதவில்லை. வினா தனிப்பட்ட நிதிபற்றியதாக இருப்பினும், சிலர் வியாபார நிறுவனங்கள் தொடர்பாக எழுதியிருந்தனர். .

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

பரீட்சார்த்திகள் முகாமைக் கணக்கியல் பற்றிய தமது அறிவை மேம்படுத்த சுயகற்கைப் புத்தகம் மற்றும் மேலதிக குறிப்புக்களை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் கடந்தகால பரீட்சை வினாக்களுக்கும் சுயகற்கை புத்தகத்திலுள்ள வினாக்களுக்கும் விடையெழுதி பயிற்சி செய்தல் வேண்டும். சித்தியடைய புள்ளிகள் பெறுவதற்கு கோட்பாட்டு ரீதியான வினாக்களுக்கும் விடையளித்தல் அவசியம்.

## வினா இல. 02

இந்த வினா நேர்பொருள் கலவை முரண் கணிப்பீடு பற்றியதாகும்.

**பெறுபேறு:** சராசரி

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகளுக்கு நேர்பொருள் கலவை முரணை கணிப்பதற்கான சூத்திரம் தெரியாமல் உள்ளது. போதிய அறிவின்மை காரணமாக அனேக பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு உரிய முழுப் புள்ளிகளையும் பெறமுடியவில்லை.

சில பரீட்சார்த்திகள் முரணானது சாதகமா அல்லது பாதகடா எனக் குறிப்பிடவில்லை.

சில பரீட்சார்த்திகள் பொருட் கணிய முரண் மற்றும் விற்பனைக் கணிய முரண் ஆகியவற்றை கலந்து நேர்பொருள் முரணைக் கணித்தலில் பொருட் கணியத்திற்குப் பதிலாக விற்பனைக் கணியத்தை எடுத்துள்ளனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

இந்த வகையான வினாக்களில் பரீட்சார்த்திகள் முரண் கணிக்கப்படும் செயன்முறையினை காட்டவேண்டும். கிட்டத்தட்ட ஒவ்வொரு பரீட்சையிலும் முரண் பகுப்பாய்வு பற்றிய வினா இடம்பெறுகின்றது. எனவே பரீட்சார்த்திகள் உயர் முரண்கள் உட்பட முரண் பகுப்பாய்வு பற்றி அதிக வினாக்களை பயிற்சி செய்திருத்தல் வேண்டும்.

## வினா இல. 03

இந்த வினா நிட்சயமற்ற நிலைகளில் பாதீட்டு திட்டமிடல் அணுகுமுறை பற்றியதாகும். இங்கு தரப்பட்ட பொருளுக்கு மூன்றுநிலை (3-tier) பாதிட்டினை தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** படுமோசம்

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் உத்தம / அதிக சாத்திய வெளியீட்டின் உயர்வான பகுதியை கணக்கிற் கொள்ளும்போது விற்பனைக்கணியத்தில் 50% அதிகரிப்பையும், குறைவான / அதிகுறைந்த சாத்தியமான பகுதியை கணக்கிற் கொள்ளும்போது 25% வீழ்ச்சியையும் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர். மூன்று வகையான வெளியீட்டின்போதும் மாறும் கிரயக் கணிப்பீடு மிகவும் மோசமாக காணப்பட்டது. அனேக பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட தரவுகளை கவனமாக வாசித்து உரியமுறையில் பகுப்பாய்வு செய்யாதமை காரணமாக ஒவ்வொரு வெளிப்பாடுகளின் கீழும் உரிய செம்மையாக்கங்களை செய்யத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

பரீட்சார்த்திகள் வேறுபட்டவகைப் பாதீடுகளின் கிழ் போதிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும். வினாவில் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ளல் மிகவும் முக்கியமானது.

## வினா இல. 04

இந்த வினாவில் தொழிற்படு மூலதனச் சுழற்சியை (WCC) கணிக்குமாறு வினவப்பட்டது.

**பெறுபேறு:** சராசரி

**பொதுவான தவறுகள்:**

WCC இனைக் கணித்தலில் சில பரீட்சார்த்திகள் வியாபாரச் சென்மதித் தீர்ப்பனவுக் காலத்தை கழிப்பதற்குப் பதில் கூட்டியிருந்தனர். சில மாணவர்களுக்கு வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் மற்றும் வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலத்தை கணிப்பது பற்றி தெரியவில்லை.

சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் மற்றும் வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலத்தை கணிப்பதில் சராசரிப் பெறுமதிகளை எடுத்திருக்கவில்லை..

சிலர் செயன்முறைகளைக் காட்டாது விடைகளை மாத்திரம் எழுதியிருந்தனர். 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தொக்கு இருப்புக் காலம் வினாவில் தரப்பட்டிருந்தது. எனினும், சிலர் தவறாக சராசரி தொக்கு இருப்புக் காலத்தை எடுத்திருந்தனர். சிலர் 53 நாட்களுக்குப் பதிலாக 50 நாட்களை தொக்கு இருப்புக் காலமாக தமது விடைகளில் எடுத்திருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

தாராளமான அறிவினைப் பெறுவதற்கு, பரீட்சார்த்திகள் கடந்த கால வினாக்களையும் ஒத்த வகையான வினாக்களையும் பயிற்சி செய்தல் வேண்டும்.

# <u>பிரிவு B</u>

## வினா இல. 05

இந்த வினாவில் இடர் மற்றும் நிட்சயமற்ற நிலைமைகளில் எதிர்பார்ப்பு பெறுமதி முறையினை பயன்படுத்தி தீர்மானம் மேற்கொள்ளல்பற்றி வினவப்பட்டது.

**பெறுபேறு: பகுதி A** க்கு நன்கு விடையளித்தும் **பகுதி B** க்கான விடை மோசமாவும் இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

**பகுதி (a):**

சில பரீட்சார்த்திகள் போதிய அறிவின்மையால் இந்த வினாவுக்கு விடையளிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு நிகழ்தகவின் கீழும் பொதிகளின் எதிர்பார்ப்புப் பெறுமதியை கணித்தலில் அந்தந்த பொதிகளின் மூன்று பெறுமதிகளையும் கூட்டவில்லை. ஒவ்வொரு பொதியின் கீழும் சுற்றுலாப் பயணிகள் வருகை மட்டத்திற்கு ஏற்ற நிகழ்தகவுப் பெறுமதியை அடையாளம் காணமுடியாமற் போனதால், அனேக பரீத்சார்த்திகள் தவறான நிகழ்தகவுகளைப் பயன்படுத்தி தவறான விடைகளை பெற்றனர். பகுதி (a) க்கான பெறுபேறுகள் பொதுவாக திருப்திகரமாக இருந்தன.

**பகுதி (b):**

அனேக பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. ஆராய்ச்சிக் கம்பனிக்கு செலுத்தக்கூடிய அதிகபட்சதொகையை கணிக்கும் முறையை அவர்கள் தெரிந்திருக்கவில்லை. சரியான தகவல்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் இலாபம் கணிக்கப்பட்டு, சரியான தகவல் கிடையாதபோது எதிர்பார்க்கப்படும் உயர்ந்தபட்ச இலாபத்தை கழிப்பதன் மூலம் ஆராய்ச்சிக் கம்பனிக்கு செலுத்தக்கூடிய உயர்ந்தபட்ச தொகை பெறப்படவேண்டும். வினாவை சரியாக விளங்கிக்கொள்ளாத காரணத்தால், தொடர்பற்ற கணிப்பீடுகளை பல பரீட்சார்த்திகள் மேற்கொண்டு இருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- விடையெழுத ஆரம்பிக்கு முன்னர் வினாவின் எதிர்பார்ப்பை வாசித்து விளங்கிக் கொள்ளவது முக்கியம்.
- அடிப்படை அறிவை பெறுவதற்கு சுயகற்கைப் புத்தகத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொள்வதுடன், போதுமானவரை கடந்தகால வினாக்களை பயிற்சி செய்தல்வேண்டும்.
- பரீட்சார்த்திகள் கோட்பாட்டு அறிவினை நடைமுறைச் சந்தர்ப்பங்களுக்கு பிரயோகிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் முகாமைக் கணக்கியல் தொடர்புபட்ட வேறு புத்தகங்களை கற்று தமது அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 06

இந்த வினாவில் விற்பனை விலை முரண், மாறும் மேந்தலைச் செலவின முரண் மற்றும் மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் ஆகிய முரண்களை கணிக்குமாறு கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** மிக மோசமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

அனேக பரீட்சார்த்திகள் சரியான சூத்திரங்களை எழுதியபோதிலும், தவறான பெறுமதிகளை பிரதியீடு செய்திருந்தனர்.

விற்பனை விலை முரண் கணிப்பீட்டில் உண்மை விற்பனை அலகுகளான 80,070 அலகுகளை பிரயோகிக்க வேண்டிய இடத்து அனேகர் பாதிடப்பட்ட விற்பனை அலகுகளான 80,000 அலகுகளை பிரயோகித்திருந்தனர்.

பகுதி **B** க்கு விடையளிக்க, அனேக பரீட்சார்த்திகள் சாதக, பாதக முரண்களை மாத்திரம் எழுதியிருந்தனர். கணக்கிணக்க தேவைக்கான தொழிற்பாட்டுக் கூற்று பற்றிய கருத்துப்பற்றி அவர்களுக்கு தெளிவாக தெரியவில்லை. பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மைப் பங்களிப்புடன் இணக்கம் செய்யும் தொழிற்பாட்டுக் கூற்றினை தயாரிக்கும்போது, பாதீடப்பட்ட பங்களிப்பு கணிக்கப்பட்டு முரண்களுக்கு செம்மையாக்கம் செய்வதன்மூலம் உண்மைப் பங்களிப்பை அடைவது பற்றி பரீட்சார்த்திகள் தெரிந்திருத்தல் வேண்டும்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- பரீட்சார்த்திகள் முரண்கள்பற்றிய சூத்திரங்களின் கோட்பாட்டு ரீதியான அறிவினை விருத்தி செய்தல் வேண்டும்.
- இது தொடர்பில் பல பயிற்சிகள் சுயகற்கைப் புத்தகத்தில் காணப்படுவதால், அவற்றை கற்று, கடந்தகால பரீட்சை வினாக்களையும் ஒத்த வினாக்களையும் பயிற்சி செய்தல் வேண்டும்.
- வினாவில் தரப்பட்ட தகவல்களை தொடர்புபடுத்தி சரியான விடைகளை பெறுவதற்கு பரீட்சார்த்திகள் பயிற்சி செய்தல் வேண்டும்.

## வினா இல. 07

இந்த வினா விகிதப் பகுப்பாய்வு சம்பந்தப்பட்டதாகும்.

**பெறுபேறு:** மிகவும் மோசமானது.

**பொதுவான தவறுகள்:**

அனேகருக்கு விகிதங்களை கணிப்பதுபற்றிய அறிவு இல்லை. உரிய சூத்திரங்களைக்கூட அவர்கள் தெரிந்திருக்கவில்லை. அனேக பரீட்சார்த்திகள் CEO வின் செயற்பாட்டினை மதிப்பிட தேவையான கம்பனி சார்ந்த விகிதங்களை கணித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் கிளை முகாமையாளர் மற்றும் CEO பரிசு பெறுவார்களா என்பதனை குறிப்பிடுவதற்குப் பதிலாக, கணிப்பிட்ட வீதங்களின் அடிப்படையில் செயற்பாடுகளைப்பற்றி விபரித்திருந்தனர். வினாவில் குறிப்பிட்டு கேட்கப்பட்டபடி கணிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் பற்றி குறிப்பிடவில்லை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கோட்பாடுகளையும் சூத்திரங்களையும் நன்கு கற்கவேண்டும். சூத்திரங்களை மனப்பாடம் செய்வது மாத்திரம் போதமானதல்ல. ஒவ்வொரு சூத்திரத்தின் காரணம் மற்றும் தேவைபற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.
- சுயகற்கைப் புத்தகத்திலும் கடந்தகால வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களை நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.
- எண்கணிதத் தவறுகளை இயன்றவரை தவிர்க்க வேண்டும்.

## <u>பிரிவு C</u>

## வினா இல 08

இந்த வினாவின் **பகுதி A** யில் இணைந்த இலாப/கனவளவு வீதம், பல உற்பத்திப் பொருட்கள் காணப்படும் நிலையில் சமப்பாட்டு மட்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரிட்சிக்கப்பட்டது.

**பகுதி B** யில் தரப்பட்ட வளங்களின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட காரணிகளை கணித்து உத்தம உற்பத்திக் கலவை மற்றும் அந்த மட்டத்தில் இலாபக் கணிப்புப்பற்றி வினவப்பட்டது.

**பெறுபேறு:** சராசரி

**பகுதி A** யின் பிரிவு (b) யில் முழுப்புள்ளிகளைப் பெற அனேக பரீட்சார்த்திகள் தவறியுள்ளனர். **பகுதி** B யினை அனேக பரீட்சார்த்திகள் நன்றாக செய்திருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

**<u>பகுதி A</u>**

- பல பரீட்சார்த்திகள் பொதி ஒன்றிற்கான பங்களிப்பை வெவ்வேறாக கணித்தபோதிலும், பொதித் தொகுதிக்கான மொத்த பங்களிப்பினை கணித்தலில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையால் பெருக்குவதற்கும் பதிலாக, அலகுப் பொதிகளின் பங்களிப்புக்களை கூட்டியிருந்தனர். அதனால் அவர்களால் இணைந்த இலாப/கனவளவு விகிதத்தினை கணிக்க முடியவில்லை.

- சில பரீட்சார்த்திகள் இணைந்த பங்களிப்பை சரியாக கணித்த போதிலும், இலாப/ கனவளவு விகிதத்தினை கணித்தலில் அலகுப் பங்களிப்பினை எடுத்திருந்தனர்.
- அனேகமான பரீட்சார்த்திகள் இரு ற்பத்திப் பொருட்களுக்கும் சமப்பாட்டு மட்டத்தினை வெவ்வேறாக கணித்திருந்தனர்.

<u>பகுதி B</u>

- சில பரீட்சார்த்திகளுக்கு வரையறைக் காரணிகள் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் இரு காரணிகளின் கீழும் உற்பத்திக் கலவையை கணித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் ஒரு அலகு வரையறைக் காரணிக்கான பங்களிப்பு அடிப்படையில் தரநிலைப்படுத்துவதற்குப் பதில், தவறாக அலகுப்பங்களிப்பு அடிப்படையில் தரநிலைப் படுத்தியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் இறுதி விடையை சரியாக கணித்திருந்தபோதிலும், அவசியமான கணிப்புக்கள் மற்றும் படிமுறைகளை காட்டியிருக்கவில்லை.
- பகுதி (c) யில் மாதத்திற்கான உத்தம உற்பத்தி மட்டத்தினை கணிக்குப்போது சிலர் மூன்று பொருட்களுக்குமான இலாபங்களை வெவ்வேறாகக் கணித்து அந்த ஒவ்வொரு இலாபத்திலிருந்தும் நிலையான கிரயத்தை கழித்திருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- பரீட்சார்த்திகள் சுயகற்கைப் புத்தகத்தை நன்கு கற்று கடந்தகால வினாத்தாள்களில் உள்ள வினாக்களையும் உதாரணங்களையும் நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.
- விடை தொடர்பான செயன்முறைகளை எப்போதும் விடைத்தாளில் காட்டுவதன் மூலமே அதிக புள்ளிகளை பெறமுடியும்.
- விடைகளை தெளிவாக எழுதுவதுடன், விடைகளை ஒரு படிமுறையாக எழுதுதல் வேண்டும்.

## வினா இல. 09

இந்த வினாவின் **பகுதி** (A) யில் முதலீட்டு மதிப்பாய்வும் **பகுதி** (B) யில் மூலதன மூலங்கள் மற்றும் மூலதனக் கிரயக் கணிப்பீடுகள் பற்றி வினவப்பட்டது. உரிய காசுப்பாய்வுகளை இனங்கண்டு நிகர இற்றைப் பெறுமதியை கணித்து அறிமுகப்படுத்தவேண்டிய உற்பத்திப் பொருளை பரிந்துரை செய்தலும், மூலதனக் கிரயங்களை கணித்து, நிறையேற்றிய மூலதனக் கிரயத்தை கணித்தலும் பரீட்சிக்கப்பட்டன.

**பெறுபேறு:** ஓரளவு திருப்திகரமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

**<u>பகுதி (A)</u>**

- அனேக பரீட்சார்த்திகள் ஏற்கனவே செலவுசெய்யப்பட்ட சந்தை ஆராய்ச்சி செலவினை ஆழ்ந்த கிரயமாக இனங்காணத் தவறியிருந்தனர். முதலீட்டு மதிப்பாய்வில் இது ஒரு தொடர்புபட்ட கிரயமல்ல.
- சில பரீட்சார்த்திகள் கழிவிடப்பட்ட காசுப்பாய்வுகளை கணித்தலில் சரியாக கழிவுக் காரணியை எடுத்திருக்கவில்லை. வினாவில் கம்பனியின் மூலதனக் கிரயம் 15% என தெளிவாக தெரிவித்திருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் 10% என எடுத்திருந்தனர்.
- அனேகமானோர் கணிப்பீடுகளின் அடிப்படையில் பரிந்துரையினை குறிப்பிடவில்லை.

**<u>பகுதி (B)</u>**

- நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயக் கணிப்பீட்டில் அனேகமான பரீட்சார்த்திகள் உரிமையாண்மை மற்றும் கடன் மூலதன சந்தைப் பெறுமதிகளை எடுக்கவில்லை.
- தனிச்சத்தின் கிரயத்தை கணித்தலில் சிலர் கம்பனி வரிவீதத்தினை கணக்கிற் கொள்ள வில்லை.
- கணிப்பீடுகளில் பல எண்கணித தவறுகள் காணப்பட்டன. எனவே, பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை மீண்டும் சரிபார்ப்பதுடன், தரப்படும் விடைகள் நியாயமானவையா என சிந்தித்துப் பாக்கவும் வேண்டும்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- சுயகற்கைப் புத்தகத்தில் ஆழ்ந்த கிரயம் பற்றி வாசித்து உரிய அறிவினை பெறுதல் வேண்டும்.
- இதே வகையான வினாக்கள் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டுள்ளதனால், கடந்த கால வினாப் பத்திரங்களிலுள்ள வினாக்களை நன்கு பயிற்சிசெய்தல் வேண்டும்.
- மூலதன மூலங்கள் மற்றும் மூலதனக் கிரயங்கள் பற்றி நல்ல அறிவை விருத்திசெய்ய வேண்டும்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் அறிவு மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>**

1. பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை முழுமையாக வாசித்தறிந்து, ஒவ்வொரு பகுதியிலும் எதிர்பார்க்கப்படும் அறிவுபற்றிய தெளிவான விளக்கத்தை பெறவேண்டும்.

2. வினாக்களை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்வதுடன், கணிப்பீடுகள் தொடர்புபட்ட சகல செயன்முறைகளையும் தெளிவாகக் காட்டவேண்டும்.

3. எடுகோள்கள் ஏதேனும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடவேண்டும்.

4. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன், வினா இலக்கங்களை சரியாக எழுதவேண்டும். விடைத்தாள்களை சமர்ப்பிக்க முன்னதாக அவை சரியாக உள்ளனவா என மீண்டும் சரிபார்க்க வேண்டும்.

5. வினாப்பத்திரத்தில் தரப்படும் அறிவுறுத்தல்களை சரியாக கடைப்பிடிக்கவும்.

6. கடந்தகால வினாக்களையும் விடைகளையும் உற்றுவாசித்தல் அறிவு மற்றும் திறமையை விருத்திசெய்ய உதவும். அவை போன்ற கட்டமைப்பைக் கொண்ட வினாக்கள் மீண்டும் பரீட்சிக்கப்படக்கூடும் ஆதலினால் இந்தமுறை எப்போதும் அனுகூலமானது.

7. சுயகற்கைப் புத்தகத்தை நன்கு வாசித்து அதிலுள்ள உதாரணங்களை நன்கு பயிற்சி செய்தல் மிக முக்கியமாகும்.

8. இந்தப் பாடம் தொடர்புபட்ட புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பிரசுரங்களை வாசித்தல் வேண்டும்.

9. பரீட்சையில் நேர முகாமைத்துவம் முக்கியமானது. ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கிய புள்ளிகளின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்க எடுத்துக்கொள்ள வேண்டிய காலத்தை மதிப்பிடலாம்.

10. உரியமுறையில் தயார்செய்து மிகுந்த நம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

- * * * -